# 2019-2020 ஆம் ஆண்டு
# வரவு–செலவுத் திட்டம் தொடர்பான
# வரவுகள் மற்றும் செலவுகளின்
# நிலை குறித்த ஆய்வு


**திரு ஓ. பன்னீர்செல்வம்**

**மாண்புமிகு துணை முதலமைச்சர்**



**ஜனவரி**, 2020

**மார்கழி, திருவள்ளுவர் ஆண்டு**–2050

# <u>2019–2020 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் நிலை குறித்த ஆய்வு</u>

தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டம்–2003 (சட்டம் எண்.16/2003), தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையால் 2003 ஆம் ஆண்டில் இயற்றப்பட்டது. இச்சட்டத்தின் பிரிவு 6 (2) –ன் படி, நிதித்துறைப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர், அரையாண்டிற்கு ஒரு முறை வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் கணிக்கப்பட்டவாறு வருவாய் மற்றும் செலவினம் உள்ளதா என ஆய்வு செய்து, வரவினம் மற்றும் செலவினத்தில் உள்ள தற்போதைய நிலையைக் கருத்தில் கொண்டு, வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின்படியான குறியீடுகளை எய்துவதற்கு தீர்வு முறைகளைக் கண்டறிந்து, அந்த ஆய்வு முடிவுகளை சட்டமன்றப் பேரவையின் முன்பு வைப்பார்.

இச்சட்டத்தின் பிரிவு **6 (3)—**ன் படி ஆய்வின் முடிவை சட்டமன்றப் பேரவையின் முன்பு வைக்கும் பொழுது, பின்வருவனவற்றை விளக்கும் விவர அறிக்கை ஒன்றை அமைச்சர் சமர்ப்பிக்க வேண்டும்:—

(அ) இச்சட்டத்தின்படி மாநில அரசுக்கு உள்ள பொறுப்புகள் (Obligations) நிறைவேற்றப்படுவதில் காணப்படும் மாறுபாடுகள் (Deviations);

(ஆ) அத்தகைய மாறுபாடுகள் முக்கியத்துவம் வாய்ந்தவையா, மற்றும் அவை உள்ளபடியேயான அல்லது எய்தப்பட வேண்டிய வரவு—செலவுத் திட்ட இலக்குகளை ஒட்டி உள்ளனவா என்பன பற்றிய விவரங்கள்; மற்றும்

(இ) மாநில அரசு மேற்கொள்ள உத்தேசிக்கும் தீர்வு நடவடிக்கைகள் (Remedial measures)

இதன் அடிப்படையில், **2019—2020** ஆம் ஆண்டு வரவு—செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் போக்குகள் குறித்த ஏப்ரல் முதல்

செப்டம்பர் 2019 வரையிலான ஆறுமாத காலத்திற்கான ஆய்வினை 2019 ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27 ஆம் நாளன்று மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்டார். இந்த ஆய்வின் முடிவு சட்டமன்றப் பேரவை முன் வைக்கப்படுகின்றது.

## வருவாய் வரவுகளின் ஆய்வு:

அரசின் மொத்த வருவாய்க் கணக்கு வரவுகள் பின்வருவனவற்றை உள்ளடக்கியதாகும்.

அ) மாநிலத்தின் சொந்த வரி வருவாய்

ஆ) மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய்

இ) மத்திய வரிகளில் தமிழ்நாட்டிற்குப் பகிர்ந்தளிக்கப்படும் தொகை

ஈ) மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள்

மத்திய அரசின் உதவி மானியங்கள் மற்றும் மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு உட்பட 2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட

மதிப்பீட்டில் மதிப்பிடப்பட்ட மொத்த வருவாய் வரவுகள் **1,97,721** கோடி ரூபாயாகும். **2019** ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையிலான மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் **83,206** கோடி ரூபாயாகும். இது **2019–2020** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் கணிக்கப்பட்ட வருவாய் வரவுகளில் **42.08** சதவீதமாகும். இது **2018–2019** ஆம் ஆண்டில் அதே கால அளவில் பெறப்பட்ட வருவாய் வரவுகளைக் காட்டிலும் **6.45** சதவீதம் கூடுதலாகும். மாநில அரசின் மொத்த வருவாய் வரவுகள் குறித்த விவரங்கள் பின்வரும் அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன.

# 2019–2020 ஆம் நிதியாண்டின் முதல் ஆறு மாதத்திற்கான தமிழ்நாடு அரசின் மொத்த வருவாய் வரவுகளின் போக்கு

| வருவாய் வரவுகள் | 2018-2019 கணக்குகள் | 2019-2020 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | செப்டம்பர் 2018 வரையிலான கணக்குகள் | செப்டம்பர் 2019 வரையில் பெறப்பட்ட வருவாய் | 2018–2019 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2019–2020 ஆம் ஆண்டில் வளர்ச்சி விகிதம் (செப்டம்பர் வரை) | 2019-2020 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் எட்டிய சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | | | % | |
| மாநிலத்தின் சொந்த வரி வருவாய் | 1,05,534 | 1,24,813 | 50,695 | 52,428 | 3.42 | 42.01 |
| மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய் | 14,200 | 13,327 | 4,383 | 5,260 | 20.01 | 39.47 |
| மத்திய வரிகளில் பங்கு | 30,639 | 33,978 | 12,964 | 12,520 | -3.42 | 36.85 |
| மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள் | 23,368 | 25,603 | 10,118 | 12,998 | 28.46 | 50.77 |
| **மொத்தம்** | **1,73,741** | **1,97,721** | **78,160** | **83,206** | **6.45** | **42.08** |

**(அ) மாநிலத்தின் சொந்த வரி வருவாய்:**

2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையிலான முதல் ஆறு மாதங்களில் மாநிலத்தின் சொந்த வரி வருவாய் **52,428** கோடி ரூபாயாகும். இது **2019–2020** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் **42.01** சதவீதமாகும். இது முந்தைய ஆண்டின் அதாவது **2018–2019** ஆம் ஆண்டு அதே கால அளவில் பெறப்பட்ட வருவாயோடு ஒப்பிடும்போது **3.42** சதவீதம் உயர்ந்துள்ளது.

நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாத காலத்திற்கான மாநிலத்தின் சொந்த வரி வருவாய்ப் போக்கின் சுருக்கம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| மாநில வரிகள் | **2018–2019** கணக்குகள் | **2019–2020** வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | செப்டம்பர் 2018 வரையிலான கணக்குகள் | செப்டம்பர் **2019** வரையில் பெறப்பட்ட வருவாய் | **2018–2019** ஆம் ஆண்டைக் காட்டிலும் **2019–2020** ஆம் ஆண்டின் வளர்ச்சி விகிதம் (செப்டம்பர் வரை) | **2019–2020** வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் எட்டிய சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | **(ரூபாய் கோடியில்)** | | | | **%** | |
| வணிக வரிகள் | 81,219 | 96,177 | 38,939 | 40,166 | 3.15 | 41.76 |
| மாநில ஆயத் தீர்வைகள் | 6,863 | 7,262 | 3,309 | 3,451 | 4.29 | 47.52 |
| முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு கட்டணங்கள் | 11,066 | 13,123 | 5,458 | 5,393 | -1.19 | 41.10 |
| வாகனங்கள் மீதான வரிகள் | 5,573 | 6,511 | 2,851 | 2,829 | -0.77 | 43.45 |
| ஏனையவை | 813 | 1,740 | 138 | 589 | 326.81 | 33.85 |
| **மொத்தம்** | **1,05,534** | **1,24,813** | **50,695** | **52,428** | **3.42** | **42.01** |

**2017** ஆம் ஆண்டு ஜூலை **1** முதல் பொருட்கள் மற்றும் சேவைகள் வரி நடைமுறைப்படுத்தப்பட்டது. பொருட்கள் மற்றும் சேவைகள் வரி விதிமுறைகளின்படி

இவ்வரி அமலாக்கத்தினால் ஏற்படும் இழப்பீட்டுத் தொகையை மாநில அரசிற்கு அளவு குறையாமல் மத்திய அரசு உறுதியாக வழங்க வேண்டும். இந்த இழப்பீட்டுத் தொகை மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியத்தின் ஒரு பகுதியாகும். மாநில வரிகளின் முக்கிய இனங்களில் 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை பெறப்பட்ட வருவாய், கடந்த ஆண்டின் இதே காலக்கட்டத்தில் பெறப்பட்ட வருவாயுடன் ஒப்பிடுகையில் 3.15 சதவீதம் ஆக உயர்ந்துள்ளது. பருவகால காரணிகள் மற்றும் நாடு தழுவிய மந்தநிலையின் காரணமாக முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு கட்டணங்கள் மற்றும் வாகன வரிகளில் இருந்து பெறப்படும் வரி வருவாயில் தொய்வு இருந்தாலும் மீதமுள்ள நிதியாண்டில் இந்நிலை சீராகும் என எதிர்பார்க்கப்படுகிறது. மாநில சொந்த வரி வருவாயின் ஒரு பகுதியான ஒருங்கிணைந்த பொருட்கள் மற்றும் சேவைகள் வரியில்

2017–2018 ஆண்டு முதல் நிலுவையிலுள்ள தொகையான 4,073 கோடி ரூபாய் பெறுவதற்கு தீவிர நடவடிக்கைகளை இந்த அரசு எடுத்து வருகிறது.

மாநில அரசு, வரி வசூலினை மேம்படுத்துவதற்கான அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வதோடு, வருவாய்ப் பற்றாக்குறையை ஈடுசெய்யவும், 2019–2020 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி வருவாய் இலக்குகளை எய்துவதற்கும், கூடுதல் நிதி ஆதாரங்களைத் திரட்டும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ள கூடும்.

**(ஆ) மாநிலத்தின் சொந்த வரி அல்லாத வருவாய்:**

2019–2020 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீடான 13,327 கோடி ரூபாயில், 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை பெறப்பட்ட வருவாய் 5,260 கோடி ரூபாயாகும். இது, முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தில் பெறப்பட்ட வருவாயைக்

காட்டிலும் **20.01** சதவீதம் வளர்ச்சியைக் காட்டி **2019–2020** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் **39.47** சதவீதமாகவும் உள்ளது. நடப்பு போக்கின் அடிப்படையில் **2019–2020** ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் மதிப்பிடப்பட்ட வருவாய் எட்டப்படுவதுடன் வரி வருவாயில் ஏற்படும் பற்றாக்குறையின் ஒரு பகுதியை ஈடுசெய்யும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

**(இ) மத்திய வரிகளில் மாநிலத்தின் பங்கு:**

பதினான்காவது நிதிக்குழுவின் பரிந்துரையின்படி, மத்திய அரசின் பொது வகுக்கப்பட்ட வரிகளில் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் பங்கில் தமிழகத்தின் பங்கு **4.969** சதவீதத்திலிருந்து **4.023** சதவீதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. அதாவது, மாநிலத்துக்கான வரி பகிர்ந்தளிப்பு **19.04** சதவீதம் குறைந்துள்ளது.

**2018–2019** ஆம் ஆண்டு கணக்குகளின் படி, மத்திய வரிகளில் மாநில அரசின் பங்காக **30,639** கோடி ரூபாய் பெறப்பட்டது. தமிழ்நாட்டிற்கான பங்கு குறைக்கப்படாமல் அதே நிலை தொடர்ந்து இருந்திருந்தால், **37,878** கோடி ரூபாய் மத்திய அரசிடமிருந்து பெற்றிருக்கக் கூடும். பதினான்காவது நிதிக்குழுவின் பரிந்துரையினால் தமிழ்நாட்டிற்கு **2018–2019** ஆம் ஆண்டில் **7,239** கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

வரிவருவாயை உயர்த்துவதற்காக மத்திய அரசால் விதிக்கப்படும் வரிகளின் மீதான மேல்வரி மற்றும் மிகைவரி கட்டணங்கள் மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட மாட்டாது என்பதாலும் மத்திய அரசிடமிருந்து மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்கப்படும் நிதி அதிகரிக்கப்படாமல் மறுக்கப்பட்டுள்ளது. **2012–2013** ஆம் ஆண்டு மத்திய அரசின் மொத்த வரி வருவாயில் **8.8** சதவீதமாக இருந்த மேல்வரி மற்றும்

மிகைவரியின் பங்கு **2019–2020** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் **15** சதவீதமாக வளர்ச்சி அடைந்துள்ளது.

பதினான்காவது நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில், மத்திய வரிகளில் தமிழகத்திற்கான பங்கு மொத்தம் **33,978** கோடி ரூபாய் என்று மத்திய அரசு **2019–2020** ஆம் ஆண்டிற்கான தனது இடைக்கால வரவு–செலவுத் திட்டத்தில் நிர்ணயம் செய்தது. பின்னர், **2019–**ம் ஆண்டு ஜூலை மாதம் மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கினை **32,551** கோடி ரூபாயாக மத்திய அரசு திருத்தியுள்ளது. பதினான்காவது நிதிக்குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் மாநிலத்திற்கான பங்கு குறைக்கப்படாமல் இருந்திருந்தால் தமிழகம் **40,206** கோடி ரூபாய் பெற்றிருக்கக் கூடும். இதனால் தமிழ்நாட்டிற்கு **7,655** கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

மத்திய வரிகளில் மாநில அரசின் பங்குத் தொகை மத்திய அரசால் மாதாந்திர தவணையாக வழங்கப்பட்டு வருகிறது. **2019** ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை பெறப்பட்ட வரவுகள் **12,520** கோடி ரூபாயாகும். இது முந்தைய ஆண்டின் இதே காலத்தில் பெறப்பட்ட வரவினத்தைக் காட்டிலும் **3.42** சதவீதம் குறைவாக உள்ளது. இது வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் **36.85** சதவீதமாக உள்ளது. இந்திய அரசால் சமீபத்தில் அறிவிக்கப்பட்ட நிறுவன வரி குறைப்பால், வருவாயில் மேலும் குறிப்பிடத்தக்க அளவு இழப்பு ஏற்படும் என எதிர்பார்க்கப்படுகிறது. மத்திய அரசின் வருவாய் குறைந்துள்ளதனால், மத்திய வரிகளில் மாநில அரசின் பங்கு தொகையில் காணப்படும் எதிர்மறை வளர்ச்சி தீவிர கவலையை அளிக்கிறது.

**(ஈ) மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள்:**

**2019–2020** ஆம் ஆண்டிற்கான மத்திய அரசு நிதி அளிக்கும் திட்டங்கள் உட்பட, மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள் **25,603** கோடி ரூபாய் என கணிக்கப்பட்டதில், **2019** ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை **12,998** கோடி ரூபாய் வரப்பெற்றது. இது, **2019–2020** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில் கணிக்கப்பட்ட உதவி மானியத்தில் **50.77** சதவீதமாகும். இதே காலகட்டத்தில் முந்தைய ஆண்டு மத்திய அரசிடமிருந்து வரப்பெற்ற உதவி மானியம் **10,118** கோடி ரூபாயாகும். மாநில அரசால், மத்திய அரசிடமிருந்து நிலுவையிலுள்ள உதவி மானிய தொகையை வசூலிப்பதற்கு எடுக்கப்பட்ட சீரிய முயற்சியால், இந்த ஆண்டு **28.46** சதவீதம் ஆரோக்கியமான வளர்ச்சி ஏற்பட்டுள்ளது.

மத்திய அரசு நிதி அளிக்கும் திட்டங்களில் மத்திய அரசின் பங்கு வகைமுறை முறைப்படுத்தப்பட்டதாலும், திருத்தப்பட்டதாலும் அத்திட்டங்களில் தனது சொந்த நிதி ஆதாரங்களிலிருந்து அதிகமான நிதியை மாநில அரசு ஒதுக்க வேண்டியுள்ளது. உதவி மானியங்களில் மத்திய அரசிடமிருந்து முந்தைய ஆண்டுவரை விடுவிக்கப்பட வேண்டிய நிலுவைத் தொகை மற்றும் நடப்பு நிதியாண்டிற்கான வரவுகளைப் பெறுவதற்கு, குறிப்பாக, பொருட்கள் மற்றும் சேவைகள் வரி இழப்பீட்டு நிலுவைத் தொகை, மெட்ரிகுலேசனுக்குப் பின் வழங்கப்படும் கல்வி உதவித்தொகை, அனைவருக்கும் கல்வி இயக்கம், தேசிய இடைநிலைக் கல்வி இயக்கத்தின் கீழ் பெறப்பட வேண்டிய உதவித்தொகை ஆகியவற்றை பெறுவதற்கு இந்த அரசு தொடர் முயற்சி மேற்கொண்டு வருகிறது. மத்திய அரசிடமிருந்து பெறவேண்டிய உதவி மானிய விடுவிப்பில் நிலுவை நீடித்தால் தமிழ்நாட்டின் நிதிநிலைமை

பாதிப்புக்குள்ளாகும் என்ற காரணத்தினால் சரியான நேரத்தில் மானியங்களை மத்திய அரசிடமிருந்து பெற அரசுத் துறைகளுக்கு தொடர்ந்து அறிவுறுத்தப்பட்டு, வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி மத்திய அரசிடமிருந்து பெறப்படும் உதவி மானியங்கள் எட்டப்படுவதுடன், சாத்தியப்படின் மதிப்பீட்டை விட அதிகரிக்கவும் உறுதி செய்யப்படுகின்றது.

## செலவினங்கள் குறித்த ஆய்வு

### (அ) வருவாய்க் கணக்கு செலவினம்

2019–2020 ஆம் ஆண்டிற்கான வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் வருவாய்க் கணக்கு செலவினங்கள் **2,12,036** கோடி ரூபாயாக இருக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. **2019** ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரையிலான வருவாய்க் கணக்கு செலவினம் **96,014** கோடி ரூபாயாகும். இது, வருவாய்க் கணக்கு

செலவினங்களுக்கான மொத்த ஒதுக்கீட்டில் **45.28** சதவீதமாகும். முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தில் ஏற்பட்ட வருவாய்க் கணக்கு செலவினம் **89,543** கோடி ரூபாய். இது **2018–2019** வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டின் **46.22** சதவீதமாகும். **2019–2020** ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதத்திற்கான வருவாய்க் கணக்கு செலவினம் கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தைக் காட்டிலும் **7.23** சதவீதம் உயர்ந்துள்ளது. இது **2019–2020** வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் **2018–2019** ஆண்டு கணக்குகளை விட கணிக்கப்பட்ட **7.52** சதவீத வளர்ச்சியை விட சற்று குறைவானதாகும். இது, மாநில அரசு செலவினங்களைக் கட்டுப்படுத்த எடுத்துவரும் முயற்சிகளை பிரதிபலிக்கிறது.

நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாத காலத்திற்கான வருவாய்க் கணக்கு செலவினப் போக்கின் சுருக்கம் பின்வருமாறு:

| வருவாய்ச் செலவினங்கள் | 2018–2019 கணக்குகள் | 2019–2020 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | செப்டம்பர் 2018 வரையிலான கணக்குகள் | செப்டம்பர் 2019 வரையிலான செலவினம் | 2018–2019 ஆம் ஆண்டைக் காட்டிலும் 2019–2020 ஆம் ஆண்டில் வளர்ச்சி விகிதம் (செப்டம்பர் வரை) | 2019–2020 வரவு செலவுத் திட்ட மதிப்பீட்டில் எட்டிய சதவீதம் |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | | | | % | |
| சம்பளங்கள் (கல்விக்கான அரசின் மானிய உதவி உட்பட) | 52,535 | 55,400 | 28,239 | 30,567 | 8.24 | 55.18 |
| ஓய்வூதியங்களும், ஓய்வுகாலப் பலன்களும் | 27,206 | 29,627 | 15,944 | 15,865 | -0.50 | 53.55 |
| ஊதியம் அல்லாத செயல்பாடுகளும், பராமரிப்புகளும் | 10,183 | 11,083 | 3,601 | 3,425 | -4.89 | 30.90 |
| உதவித் தொகைகளும், நிதி மாற்றங்களும் | 77,895 | 82,673 | 30,233 | 33,387 | 10.43 | 40.38 |
| வட்டி செலுத்துதல் | 29,358 | 33,226 | 11,509 | 12,758 | 10.85 | 38.40 |
| ஏனையவை | 24 | 27 | 17 | 12 | -29.41 | 44.44 |
| **மொத்தம்** | **1,97,201** | **2,12,036** | **89,543** | **96,014** | **7.23** | **45.28** |

## (ஆ) மூலதனச் செலவினம்

2019–2020 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில், மூலதனச் செலவினத்திற்காக 31,251 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில், 2019 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை 9,211 கோடி ரூபாய் செலவிடப்பட்டுள்ளது. இது, மூலதனக் கணக்கு செலவினங்களுக்கான மொத்த ஒதுக்கீட்டில் 29.47 சதவீதமாகும். முந்தைய ஆண்டின் இதே காலகட்டத்தில் ஏற்பட்ட மூலதனக் கணக்கு செலவினம் 5,796 கோடி ரூபாய். 2019–2020 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதத்திற்கான மூலதனக் கணக்கு செலவினம் கடந்த ஆண்டின் இதே காலகட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவினத்தைக் காட்டிலும் 58.92 சதவீதம் உயர்ந்துள்ளது. மூலதனச் செலவுகளுக்கான பணிகளை மேற்கொள்ள அரசாணைகள் வெளியிடப்பட்டு, பணிகள் விரைவாக

மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, வரும் மாதங்களில், மூலதனப் பணி செயலாக்கத்தின் வேகம் அதிகரிப்பதோடு ஒதுக்கப்பட்ட நிதிகளும் சரியான முறையில் பயன்படுத்தப்படும்.

## ஆண்டுவாரியான நிதிநிலைக் குறியீடுகள்

2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் மாநில அரசு திருத்தம் மேற்கொண்டது. திருத்தப்பட்ட சட்டப்படி, மாநில அரசு 2019–2020 ஆம் ஆண்டிற்குள் வருவாய்ப் பற்றாக்குறையை அறவே நீக்குவதோடு 2017–2018 ஆம் ஆண்டிற்குள் நிதிப் பற்றாக்குறையை மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவீதத்திற்கு மிகாதவாறு பராமரிக்கப்பட வேண்டும். 2017–2018, 2018–2019 ஆம் ஆண்டுகளுக்கான ஆய்வறிக்கை மற்றும் தற்போதைய

ஆய்வறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள சூழ்நிலைகள் காரணமாக இந்த இலக்கினை அடைய இயலாததுடன் வருவாய் உபரியை எய்துவதற்கான காலத்தை நீட்டிப்பு செய்யும் வகையில் வருவாய் பற்றாக்குறை தொடர்பான சட்டப்பிரிவில் திருத்தம் செய்வது அவசியமாகிறது. 2019–2020 ஆம் ஆண்டில், நிதிப் பற்றாக்குறையானது மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் 2.56 சதவீதமாக, வரையறுக்கப்பட்ட விதிமுறைக்குள் உள்ளது.

2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்திய பின் ஆண்டுவாரியான நிதிநிலைக் குறியீடுகளின் நிலவரம் பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டின் முதல் ஆறு மாதங்களுக்கான நிதிநிலைக் குறியீடுகள் பின்வருமாறு:

## நடப்பு ஆண்டின் நிதிநிலைக் குறியீடுகள்

| நிதிநிலைக் குறியீடுகள் | 2019-2020 வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் | 2019,செப்டம்பர் மாதம் வரை |
|---|---|---|
| | (ரூபாய் கோடியில்) | |
| மொத்த வருவாய் வரவுகள் | 1,97,721 | 83,206 |
| வருவாய் செலவினம் | 2,12,036 | 96,014 |
| வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (-) | –14,315 | –12,808 |
| மொத்த மூலதனச் செலவினம் (நிகர கடன்கள் மற்றும் முன்பணங்கள் உட்பட) | 29,861 | 7,212 |
| மொத்தச் செலவினம் | 2,41,897 | 1,03,226 |
| நிதிப் பற்றாக்குறை | 44,176 | 20,020 |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பீடு | 17,26,681 | ––– |
| | (%) | |
| மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (-) (%) (இலக்கு) | ---- | ---- |
| மொத்த வருவாய் வரவுகளில் வருவாய் உபரி (+) / பற்றாக்குறை (-) (%) (உள்ளபடி) | (-) 7.24 | (-) 15.39 |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை (%) (இலக்கு) | < 3.00 | < 3.00 |
| மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் நிதிப் பற்றாக்குறை (%) (உள்ளபடி) | 2.56 | 1.16 |

**2019** ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் வரை வருவாய்ப் பற்றாக்குறை **12,808** கோடி ரூபாயாக உள்ளது.

செலவினங்களை கட்டுப்படுத்தியும் வரிவருவாயினை மேம்படுத்தியும், வருவாய்–செலவினங்களுக்கான இடைவெளியை சமன் செய்வதுடன், வருவாய் பற்றாக்குறையைக் கணிக்கப்பட்ட அளவிற்குள் கொண்டுவருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**<u>நிதிநிலைக் குறியீடுகள் ஆய்வு</u>**

முந்தைய பத்திகளில் விவரிக்கப்பட்டுள்ள சில இனங்களைத் தவிர பொதுவாக 2019–2020 ஆம் ஆண்டிற்கான முதல் ஆறு மாத வரவுகள் மற்றும் செலவுகளின் போக்குகள் வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை ஒட்டியே உள்ளது.

பதினான்காவது நிதிக் குழுவின் பரிந்துரையின் விளைவாக மத்திய வரிகளில் தமிழகத்திற்கான பங்கு குறிப்பிடத்தக்க அளவு குறைந்ததன் காரணமாக மாநில

அரசின் நிதி ஆதாரங்கள் பாதிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு, மாநிலங்களுக்கு பகிர்ந்தளிக்காத அடிப்படை வரிகளின் மீதான மிகைவரி மற்றும் மேல்வரியின் மூலம் தனது வரிவருவாயை அதிகரித்து வரும் போக்கு, மாநிலங்களுக்கான மத்திய வரிகளின் நிகர வரிப்பங்கினை மேலும் குறைக்கிறது. மேலும், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்களுக்கு மத்திய அரசின் நிதிப் பகிர்வு குறைப்பின் காரணமாக, மாநில அரசிற்கு கூடுதல் செலவினம் ஏற்பட்டுள்ளது. இச்செலவினத்தை மாநில அரசு தனது வருவாய் வரவுகளிலிருந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதால் மேலும் கூடுதல் நிதிச்சுமை ஏற்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த பொருட்கள் மற்றும் சேவைகள் வரியில் மாநிலத்தின் பங்கு, மெட்ரிக்குலேசனுக்கு பிந்தைய வகுப்புகளுக்கு வழங்கப்படும் கல்வி உதவித் தொகை, அனைவருக்கும் கல்வி இயக்கம், தேசிய இடைநிலை கல்வித் திட்டம்

ஆகியவற்றின் கீழ் தொகைகளை மீளப் பெறுவதில் முந்தைய ஆண்டுகளின் நிலுவை மற்றும் நடப்பு ஆண்டிற்கான மானியங்கள், பதிமூன்றாவது நிதிக்குழு மானியங்களின் நிலுவைத் தொகை போன்றவற்றை மத்திய அரசு விடுவிப்பதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக மாநிலத்தின் நிதி நிலை பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, மத்திய அரசிடம் மாநில அரசுக்கு கிடைக்க வேண்டிய நிலுவைத் தொகையை முழுமையாகப் பெற தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அண்மையில் மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்ட நிறுவன வரி திருத்தங்களால் மத்திய வரிகளின் மாநில வருவாய்ப் பங்கு கணிசமான அளவு குறைய வாய்ப்புள்ளது.

வருவாய்ப் பற்றாக்குறை, வரவு–செலவுத் திட்ட மதிப்பீட்டில் கணிக்கப்பட்ட 14,315 கோடி ரூபாய் அளவைக் காட்டிலும் சற்று அதிகரிக்க வாய்ப்புள்ளது. வருவாய்ப்

பற்றாக்குறையை கட்டுப்படுத்த வருவாய்ச் செலவினங்களைக் கட்டுப்படுத்தியும், வருவாய் வரவுகளை நிர்வாக மேம்பாடு மற்றும் கூடுதல் வள ஆதார திரட்டு போன்ற நடவடிக்கைகளினால் அதிகரித்தும், அரசு தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறது.

கடுமையான நிதிநிலையிலும் மாநில அரசு பல்வேறு வளர்ச்சி மற்றும் நலத்திட்டப் பணிகளைத் திறம்பட செயல்படுத்தி வருகிறது. செலவினங்களைக் கட்டுப்படுத்தியும், திட்ட செயலாக்கத் திறனை மேம்படுத்தியும் வருவாய் வரவுகளை அதிகரிப்பதற்கு முயற்சிகள் எடுத்தும் வருவாய்ப் பற்றாக்குறையைக் குறைக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு தேசிய அளவு பொருளாதார வளர்ச்சி விகிதம் குறைந்துள்ளதால், செலவினங்களைக் குறைப்பதன் மூலம் நிதிநிலையைக் கட்டுப்படுத்துவது பொருளாதார வளர்ச்சிக்கு மேலும் மோசமான தாக்கத்தை

ஏற்படுத்தக்கூடும். எனவே, இந்த அரசு உரிய கவனத்துடன் வளர்ச்சி செலவினங்கள் சரியான அளவில் இருந்து குறைக்கப்படாமல் இருப்பதை உறுதி செய்யும். ஆகவே, வருவாய்ப் பற்றாக்குறை அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பைத் தவிர, ஏனைய மதிப்பீடுகள் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடுகளில் கணிக்கப்பட்ட அளவை ஒட்டியே இருக்கும். நிதிப் பற்றாக்குறைக்கான இலக்கையும் மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் கடன் விகிதத்தையும் கணிக்கப்பட்ட அளவிற்குள் வைப்பதற்கு தேவையான முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

2003 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதிநிலை நிருவாகப் பொறுப்புடைமைச் சட்டத்தில் (திருத்தப்பட்டது) கூறப்பட்டுள்ள இலக்குகளுக்கு ஏற்ப, மாநிலத்தின் நிதிநிலையை நிருவகிக்கும் பொருட்டு, நடுத்தரக் கால நிதி நிலவரத் திட்டம் ஒன்றை நிதிநிலை அறிக்கையுடன் அரசு தாக்கல் செய்து வருகிறது.

**2019–2020** ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டம் தொடர்பான வரவுகள் மற்றும் செலவுகளின் போக்குகள் குறித்த இந்த ஆய்வு, மாநிலத்தின் உண்மையான நிதிநிலையை எடுத்துரைப்பதுடன், நடுத்தரக் கால நிதி நிலவரத் திட்டத்தில் வரவினம்–செலவினம் இடையேயான இடைவெளி ஏதேனும் இருப்பின் அவற்றைச் சமன் செய்ய மாநில அரசு முயற்சிகளை எடுத்து வருகிறது என்பதையும் காட்டுகிறது.

**ஓ.பன்னீர்செல்வம்**
**துணை முதலமைச்சர்**

*********

## பின்னிணைப்பு

## ஆண்டுவாரியான நிதிநிலைக் குறியீடுகள்

| விவரங்கள் | வருவாய் உபரி / பற்றாக்குறை | | | நிதிப் பற்றாக்குறை | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த வருவாய் வரவுகளில் (%) (இலக்கு) | (ரூ.கோடியில்) | மொத்த வருவாய் வரவுகளில் (%) (உள்ளபடி) | மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் (%) (இலக்கு) | (ரூ.கோடியில்) | மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் (%) (உள்ளபடி) |
| **2003–2004 கணக்குகள்** | - 20.28 | -1565.24 | - 6.60 | 4.01 | 5591.16 | 3.19 |
| **2004–2005 கணக்குகள்** | - 17.28 | -703.34 | - 2.47 | 3.76 | 5569.76 | 2.54 |
| **2005–2006 கணக்குகள்** | - 14.28 | 1951.33 | 5.75 | 3.51 | 2250.61 | 0.87 |
| **2006–2007 கணக்குகள்** | - 11.28 | 2648.26 | 6.47 | 3.26 | 3956.00 | 1.27 |
| **2007–2008 கணக்குகள்** | - 8.28 | 4545.49 | 9.57 | 3.01 | 3685.59 | 1.05 |
| **2008–2009 கணக்குகள்** | < - 5.00 | 1452.25 | 2.64 | < 3.00 | 8547.76 | 2.13 |
| **2009–2010 கணக்குகள்** | ** | - 3531.22 | - 6.32 | < 4.00 | 11807.26 | 2.46 |
| **2010–2011 கணக்குகள்** | < - 5.00 | - 2728.69 | - 3.89 | < 4.00 | 16646.62 | 2.85 |
| **2011–2012 கணக்குகள்** | 0 / உபரி நிலை | 1364.10 | 1.60 | < 3.00 | 17274.08 | 2.30 |
| **2012–2013 கணக்குகள்** | 0 / உபரி நிலை | 1760.27 | 1.78 | < 3.00 | 16518.99 | 1.93 |
| **2013–2014 கணக்குகள்** | < - 5.00 | - 1788.24 | - 1.66 | < 3.00 | 20583.49 | 2.12 |

| விவரங்கள் | வருவாய் உபரி / பற்றாக்குறை | | | நிதிப் பற்றாக்குறை | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்த வருவாய் வரவுகளில் (%) (இலக்கு) | (ரூ.கோடியில்) | மொத்த வருவாய் வரவுகளில் (%) (உள்ளபடி) | மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் (%) (இலக்கு) | (ரூ.கோடியில்) | மாநில மொத்த உற்பத்தி மதிப்பில் (%) (உள்ளபடி) |
| **2014–2015** கணக்குகள் | ** | - 6407.56 | - 5.23 | < 3.00 | 27162.44 | 2.49 |
| **2015–2016** கணக்குகள் | ** | -11985.35 | - 9.29 | < 3.00 | 32627.56 | 2.69 |
| **2016–2017** கணக்குகள் | ** | -12964.13 | - 9.24 | < 3.00 | 56171.35 | 4.20 |
| **2017–2018** கணக்குகள் | ** | - 21593.88 | - 14.76 | < 3.00 | 39839.51 | 2.76 |
| **2018–2019** கணக்குகள் | < - 5.00 | -23459.45 | - 13.50 | < 3.00 | 47,334.90 | 2.97 |
| **2019–2020** வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகள் | --- | -14314.76 | -7.24 | < 3.00 | 44176.35 | 2.56 |

** இலக்கு நிர்ணயிக்கப்படவில்லை.